[8th November 1966

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நாகம்பந்தல் கிராமத்தில் உள்ள ஏரித்தண்ணீரை குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மட்டும் பயன்படுத்தவேண்டும் எனச் செய்யவேண்டும் என்பதாக அக்கிராம மக்கள் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதைத் தடுக்கக்கூடாது என்பதாகவும் வேறு யாராவது மகஜர் அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : அந்தமாதிரி தகவல் இல்லை. இப்போதுள்ள ஏரியில் குடிதண்ணீர் எடுத்துக்கொள்வதைப் பற்றித் தடை எதுவும் இல்லை. பஞ்சாயத்து எலெக்ஷன் விரோதம் காரணமாக அதில் இருந்து பாசனத்திற்கு விடக்கூடாது என்கிற ஆட்சேபம் எழுந்திருக்கிறது.

கனம் சபாநாயகர் : ஆயக்கட்டுகளுக்கு இருக்கிற உரிமையை மாற்ற யாருக்காவது ரைட் இருக்கிறதா?

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : அம்மாதிரி உரிமை இல்லை. அப்படிச் செய்கிற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : You will have to acquire the tank and subject to the judicial proceedings only, you can think about changing it into a drinking water tank.

Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED HARASSMENT OF AGRICULTURISTS BY PROCUREMENT OFFICIALS.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே. கிராமங்களிலே ப்ரொக்யூர்மெண்டு செய்யும் அதிகாரிகள் விவசாயிகளுக்கு இழைக்கின்ற அநீதியைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரேபணையைக் கொண்டுவர உங்கள் அனுமதியை விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி, கஷ்டப்படுத்தி ப்ரொக்யூர்மெண்டு செய்ய கட்டளை பிறப்பிக்கவில்லை, எளிதான முறையில், சுலபமான முறையில் ப்ரொக்யூர்மெண்டு செய்யப்படுகின்றது என்பதாகக் கூறினார்கள். ஆனால் தஸ்தாவேஜு பூர்வமாக கையில் வைத்திருக்கிறேன். நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அங்கங்கே உள்ள அதிகாரிகள் ஐந்து சென்ட் உள்ளவனுக்கு ஒரு மூட்டை, பத்து சென்ட் வைத்துள்ளவனுக்கு இரண்டு மூட்டை, ஒரு எக்கரா வைத்துள்ளவனுக்கு 20 மூட்டை என்பதாக கட்டாயமாக வைக்க (ஒரு சீட்டைக் காட்டி) இது போன்ற பாரங்களை அச்சிட்டு சம்மனைப் போலக் கொடுத்துவிடுகிறார்கள். எத்தனையோ பேர்களுக்கு இதுபோல அனுப்பப்பட்டுள்ள நோட்டீஸ்களை நான்

8th November 1966] [திரு. சா. கணேசன்]

இங்கே வைத்திருக்கிறேன். முதல் சீட்டுக்குரிய இவருக்குச் சொந்தமான நிலம் 0.06 ஏக்கரா, இவர் கட்டாயமாக ஒரு மூட்டை கொடுத்தாகவேண்டும். இதுபோல . . .

MR. SPEAKER: The hon. Member, Sri Alagamuthu, has given notice under Rule 57 to discuss a similar matter.

திரு. சா. கணேசன்: இதுபோன்ற விஷயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருதி இதுபற்றி விவாதிப்பதற்காகச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்பதாக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் செய்வது என்பது அரசாங்கத்தின் திட்டம். அது நிர்வாக தோரணையில் நடைபெறும்போது ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை வேறுவகையில் தெரிவிக்க வேண்டுமே தவிர ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல. யாராக இருந்தாலும் விற்பதற்கு அவர்களிடம் நெல் இருந்தால் அதை சர்க்காரிடம் நிர்ணயித்துள்ள விலைக்குக் கொடுக்கவேண்டுமென்பது முக்கியமானது. வேறு ஏதாவது கொள்முதலில் நிர்ப்பந்தம், தவறு இருந்தால் அதைத் தெரியப்படுத்தினால் விசாரித்து சரிசெய்யலாம். ஆனால், இது ஒத்திவைப்புப் பிரரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Consent is withheld.

(2) SUPPLY OF INFERIOR QUALITY RATION RICE IN MADRAS CITY.

* *திரு. சா. கணேசன்:* கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரில் கொடுக்கப்படுகிற ரேஷன் அரிசி மிக மிக மோசமாக உண்பதற்குத் தகுதியற்றதாக இருப்பதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரபணையைக் கொண்டுவரத் தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

அதையொட்டி, கனம் சபாநாயகர், அவர்களே, நான் தங்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். சென்னையில் கொடுக்கப்படுகிற அரிசியின் சாம்பிளை ரேஷன் வாங்கியவர்கள் அவர்கள் கையொப்பமிட்டே அனுப்பியிருக்கிறார்கள். அவற்றையும் சபையில் சமர்ப்பிக்கிறேன். அதன்மீது முதல் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாகவேண்டும். ரேஷன் என்று ஏற்படுத்திவிட்டு—இதுபோன்ற அவல நிலை நீடிக்க விடக் கூடாது. அரசாங்கத்தால் ஒழுங்கான முறையில் அரிசி விநியோகம் செய்ய முடியவில்லை என்றால் ரேஷனையே எடுத்துவிட்டு அவரவர்கள் எங்கிருந்தா வேண்டுமானாலும் கொண்டு வந்து சாப்பிடட்டும் என்று விட்டுவிடலாம். அதையும் தடுத்து இப்படிச் செய்வது சரியல்ல என்று உங்கள் மூலமாக நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த ரேஷன் அரிசிப் பொட்டலத்தை அவரிடத்தில் சமர்ப்பிக்கிறேன்.